**தலைப்பு 323 – சட்ட அலுவல்கள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 11 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஏப்ரல் 28 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

சட்ட அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருப்பதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

02/2020 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்களத்தின் 10.1 ஆம் பந்திக்கு இணங்க அரச கணக்குகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டல் இலக்கம் 06 இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று (ACA –C மாதிரி) கிட்டிய அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று அவ்வாறு தயாரிக்கப்படவில்லையென்பது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஏனைய வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 590,730 ஆன வருமானம் தொழிற்பாட்டு செயற்பாடு களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை | ரூபா 590,730 ஆன நிதிப் பெறுமானம் ஏனைய பெறுவனவுகளாக நிதிச் செயலற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்ட போதும் உள்ளவாறாக அப்பெறுமானத்திற்கு பெறுமதிகள் காசாகவோ அல்லது காசுக்கு சமமானதாகவோ திணைக்களத்திற்கு கிடைக்காமையால் காசுப்பாய்ச்சல் கூற்றுக்கு உள்ளடக்கப்படாத அப்பெறுமதிகள் குறுக்கு பெறுமதிகளிலிருந்து செய்யப்பட்ட அறவீடுகளாகும். | வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் ஆண்டில் முற்பண அறவீடுகள் ரூபா 815,018 தொகை முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டமை காரணமாக காசு உட்பாய்ச்சல் அப் | ரூபா 815,018 ஆன நிதிப் பெறுமானத்தினுள் குறுக்கு பதிவு மூலம் கடன் மற்றும் முற்பண அறவீடு திணைக்களத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற ஊழியர்களின் கடன் கையளிப்பாக இருப்பதால் இது உள்ளவாறாக காசு | முற்பண அறவீடுகளில் மொத்த பெறுமதி காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடு களின் கீழ் காண்பிப்பது அவசியமாகும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மற்றும் காசல்லாத உட்பாய்ச்சல் அல்லாததால் அதனை காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட வில்லையென | |
| (ஆ) | திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் ஆண்டில் முற்பண கொடுப்பனவுகள் ரூபா 659,980 தொகையாக இருந்த போதும் காசுப் பாய்ச்சல் கூற்றில் முற்பணக் கொடுப்பனவு ரூபா 221,400 ஆக காண்பிக்கப் பட்டிருந்தமையால் ரூபா 438,580 தொகையான காசு வெளிப்பாய்ச்சல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ரூபா 438,580 ஆன நிதிப் பெறுமானம் உள்ளவாறாகவே திணைக்களத்திலிருந்து ஊழியர்களின் கடன் மற்றும் முற்பணமாக செலுத்திய பெறுமதியொன்றல்ல என்பதால் அப்பெறுமதி வேறு திணைக்களங்களிலிருந்து இடமாற்றம் பெற்ற வந்த ஊழியர்களிடமிருந்து கையேற்கப்பட்ட கடன் மற்றும் முற்பணக் கணக்குகளின் மீதியாக இருப்பதால் காசுப் பாய்ச்சல் கூற்றில் இப் பெறுமானம் உள்ளடக்கப் படவில்லையென | முற்பண கொடுப்பனவுகளில் மொத்த பெறுமதி காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்குவது அவசியமாகும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 ஏனைய அவதானிப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 300,000 ஆக இருந்த போதும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அரச உத்தியோகத்தர்களின் முற்பண "பீ" இணக்கக் கூற்றின் பின்னிணைப்பு 01 இல் அந்த எல்லை ரூபா 200,000 ஆக சீராக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்காக ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 300,000 வரை அதிகரிப்பதற்கு வேண்டுகோளொன்று விடுக்கப்படவில்லை எனவும் அது அரச கணக்குகள் திணைக்களத்தில் பிரதி செய்யும் போது இடம்பெற்ற தவறு ஒன்றாகவும் 2021 ஆம் ஆண்டிற்காக தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அச்சீட்டுப் பிரதிகளில் ரூபா 200,000 என குறிப்பிடப் பட்டிருந்தது என அறிவித்திருந்தார். | குறித்த இணக்கக்கூற்றை தயாரிக்கும் போது வருடாந்த மதிப்பீடு கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 வரைவு செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசணையை பெற்றுக் கொள்வதற்கும் சட்ட அலுவல்கள் திணைகளத்தினதும் அவதானிப்புக்களுக்காக முன்னைய ஆண்டில் இருந்து காணப்படும் 02 கோவைகள் ஆண்டின் இறுதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்டமா அதிபர் ஆலோசணைகளைப் பெற்றுக்கொள்வதற்காக முன்னைய ஆண்டிலிருந்து காணப்படும் 02 கடிதங்களுக்காக சட்டமா அதிபர் திணக்களத்தினால் சட்ட ஆலோசணை வங்கப்படவில்லையென அறிவிக்கப்பட்டிருந்தது. | சட்ட அலுவல்களுக்காக கிடைக்கப்பெறும் கோவைகள் தொடர்பாக தாமதமின்றி நடவடிக்கை எடுக்கம் தேவைப்பாடு |

## 4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 19 ஆக இருந்த போதும் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை 14 ஆக இருப்பதால் ஊழியர் எண்ணிக்கை 26 சதவீதம் அதாவது 05 பேர் பற்றாக்குறையாக இருந்ததாக அவதானிக்கப்பட்டது. | பணிப்பாளர் நாயகம் பதவி அமைச்சரவையால் நியமனம் செய்ய வேண்டிய பதவியொன்றாகவும் 02 பதவிகள் 2020 ஆம் ஆண்டில் வெற்றிடம் ஏற்பட்டதாகவும் எஞ்சிய வெற்றிடங்களை நிரப்பவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | இந்த வகையில் இப்பதவிகளின் வெற்றிடங்கள் காணப்படுவது திணைக்களத்தின் செயலாற்றலுக்கு பாதகமாக தாக்கமளிக்குமானால் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கும் அவ்வாறான தாக்கங்கள் இல்லாவிட்டால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையை திருத்தம் செலுத்த நடவடிக்கை எடுக்கும் தேவைப்பாடு. |